| | | |
|---|---|---|
| சாட்சி :DW1<br>மொட்டையாண்டி<br>த/பெ.பெரியசாமி | அ.வ.எண்.13/2021 | 09.04.2026 |

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

1) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.277 ல் 3 ஏக்கர் 6 செண்ட் நிலத்தை எனது தகப்பனார் கிரையம் பெற்றார். மேற்படி ஆவணத்தில் சர்வே எண் 275 ல் 1 ஏக்கர் 75 செண்ட் நிலம் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி சர்வே எண்ணில் மேற்படி 1 ஏக்கர் 75 செண்ட் நிலத்திற்கு தென்புறத்தில் 60 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் 1 ஏக்கர் 75 செண்ட் நிலத்திற்கு வடக்கில் 10 செண்ட் நிலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சர்வே எண். 275 ல் கல்கட்டு கிணற்று பாத்தியத்தையும், 2 ல் 1 பாகத்தையும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.275 ல் கிரையம் பெற்ற மேற்படி சொத்துக்களை நான் விற்பனை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களை எனது தகப்பனார் மட்டும் தனியாக கிரையம் பெற்றிருந்தால் எனது தகப்பனார் பெயரிலும் அதன் பின்னிட்டு எங்கள் பெயரிலும் பட்டா ஏற்பட்டு இருக்கும் என்றாலும் அதுபோல பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

2) எனது தகப்பனார் சர்வே எண்.275 ல் 2 ஏக்கர் 45 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் மொத்தம் கூடதலாக 61 ஏர்ஸ் கண்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–2 ஆவணத்தின்படி எனது தகப்பனார் பெருக்கு 1 ஏக்கர் 48 செண்ட் தான்

கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.275ன் நான்கெல்லையில் குறிப்பிடப்பட்டுள்ள மருதை என்பவர் என்னுடைய தாத்தாவா என்றால் இல்லை. மேற்படி மருதை என்னுடைய தாத்தா என்றாலும் புல எண்.275ல் மருதை முத்திரையருக்கு மேலும் 1–1/2 ஏக்கர் நிலம் இருந்தது என்றாலும் சரியல்ல. மொத்தம் சர்வே எண்.275ல் இருந்த 5 ஏக்கர் 20 செண்ட்டில் 4 ஏக்கர் நிலமானது எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றாலும், பி.வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள படி 2 ஏக்கர் 45 செண்ட்டும் பூர்வீகமாக 1 ஏக்கர் 60 செண்ட்டும் பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. அதன்படி என்னிடம் காட்டப்படும் பட்டாவில் எனது பெயரிலும் எனது சகோதரர் பெயரிலும் சர்வே எண்.275/1சி ல் 39.50 ஏர்ஸ், 275/3 ஜி ல் 15.50 ஏர்ஸ, 275/3 H ல் 6.50 ஏர்ஸ் மொத்தம் 61.50 ஏர்சுக்கு பட்டா எண்.1353 ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் வா.சா.ஆ–12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதேபோல் என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.918 ஆனது 1,2 வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். புல எண்.275/ 1பி ல் 19 ஏர்ஸ். 275/1டி யில் 8.50 ஏர்ஸ், 275/4பி ல் 6 ஏர்ஸ், 275/6 E ல் 54.50 ஏர்ஸ் நிலமானது வாதிகளில் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது. **மேற்படி பட்டா எண்.918 ஆனது வா.சா.ஆ–13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) நான் சொல்வது போல் 12.08.1958 கிரைய ஆவணமான பி.வா.சா.ஆ.1ல் கண்ட புல எண்.275ல் கண்ட சொத்தானது எனது தந்தைக்கு மட்டுமே உரிமையானது என்றால் இந்த வாதிகளின் பெயருக்கு 88 ஏர்சுக்கு பட்டா ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. பட்டா எண்.918ல் கண்ட சொத்துக்களை மேற்கண்ட வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ல் நத்தம் புல எண்.111ல் பெருமாள் கோவில் நந்தவனத்திற்கு வடக்கு, பெத்தான்குளத்திற்கு

கிழக்கு, சப்பாணி முத்திரையர் மனைக்கு தெற்கு, ரோட்டிற்கு மேற்கு இதற்குள்பட்ட இடத்தில் கண்டுள்ள வீட்டு மனையானது தற்போது எனது சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தை 1967 ல் எனது தந்தையும், எனது சித்தப்பாவும் ரெங்கன் செட்டியார் என்பவருக்கு கூட்டு குடும்ப சொத்து என்பதால் தான் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1984 ம் ஆண்டு தான் எனது அப்பாவும், எனது சித்தப்பாவும் கிரையம் பெற்ற சொத்துக்களையும், கூட்டுகுடும்ப சொத்துக்களையும் பங்கு பிரித்து கொண்டார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக 1954 ம் ஆண்டே பாகம் பிரிக்கப்பட்டதாக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) எனது வீட்டிற்கு மேல்புறம் வாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 ல் கண்ட வடக்கு தெருவில் வீதிக்கு தெற்கு, தென்வடல் வீதிக்கு கிழக்கு, ராமபத்திர ஐயர் வீட்டிற்கு மேற்கு, இதற்குட்ட கூரைவீட்டில் தான் வாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும் அதன் கீழ்புறத்தில் உள்ள வீட்டில் தான் நான் தற்போது வசித்து வருகிறேன் என்றாலும் மேற்படி வீடு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றாலும், மேற்படி வீடனாது பூர்வீக வீடு தான். வாதிகள் குடியிருந்து வரும் வீடு ஐயரிடம் வாங்கிய வீடா என்றால் எனக்கு தெரியாது. நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தில் தான் சர்வே எண்,277 ஆனது எங்கள் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் 1986 ம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டது. நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தில் வழங்கப்பட்ட மேற்படி பட்டாவை வைத்து தான் சாகுபடி அடங்கல் தாக்கல் செய்து புல எண்.277 ல் கட்டுப்பட்ட 3 ஏக்கர் 6 செண்ட் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என கட்சிசெய்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ல் திருத்தம் ஏதும் செய்யப்படவில்லை. திருத்தம் செய்யப்பட்டுள்ளது

என்றாலும் நான் வழக்கிற்க்காக திருத்தம் செய்யப்படவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக எனது அப்பா பெயரில் உள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை திருத்தம் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி திருத்தங்கள் UDR சர்வேக்கு பின்னிட்டு அதில் கண்டுள்ளபடி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5) எங்களுக்கு எங்களெல்லாம் சொத்துக்கள் உள்ளதோ அதற்கு அருகில் வாதிகளுக்கும் சொத்துக்கள் உள்ளது என்றாலும் பாகம் பிரித்து கொண்டதால் மேற்படி சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. UDR திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பட்டாவை வைத்துகொண்டு பூர்வீக சொத்துக்களை எங்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என கட்சி செய்வது ஏற்புடையதல்ல என்றாலும் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**Signed,**

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.